கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம் வலசைக்கல் பட்டியில் கட்டப்பட்ட ஏரி.

* வினா எண் 11—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் ஆத்தூர் வட்டத்தில் கெங்கவல்லி வலசைகல் பட்டி ஏரி கட்டப்பட்டுள்ளதால் நடூர், மால்புளி முதலான சுமார் பதினைந்து ஊர்களுக்குச் செல்லும்வழி தடுக்கப் பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மாற்று வழித்தடம் அமைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ), (ஆ). கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், 74 கிருஷ்ணாபுரம் ஊராட்சி வலசைக்கல் பட்டியில் பொதுப்பணித் துறையினரால் ஏரி கட்டப்பட்ட சமயத்தில் 74 கிருஷ்ணாபுரத்தில் இருந்து நடூர், மால்புளி முதலிய கிராமங்களுக்குச் செல்லும் பாதையில் சுமார் 0.60 கி. மீ. ஏரி அமைப்பில் அடங்கி விட்டது. எனவே மேற்படி பாதைத் தொடர் பாதிக்கப்படாத வகையில் 1.40 கி. மீ. நீளமுள்ள மாற்றுப்பாதை மேற்கண்ட ஏரிக்கு கிழக்கு திசையில் மலை ஓரமாக 1981-82-ல் வறட்சி நிவாரணத் திட்டத்தில் ரூ.7,500/ செலவு செய்து 17-6-81-ல் பணி முடிக்கப்பட்டது. இந்த வினாவிலே குறிப்பிடப்பட்டபடி எந்தவிதமான தடையு எந்த ஊருக்கும் ஏற்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

* வினா எண் 12—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் துக்காச்சி கிராமத்திற்கும் நெடுஞ்சாலைக்கும் இடையில் அரசலாற்றில் ஓர் பாலம் கட்ட திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செலவிட அரசு அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பாலம் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ,) (ஆ) 1982—83-ம் ஆண்டில் ரூ. 1.00 லட்சம் மதிப்பீட்டில் தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்தப் பாலம் செயல்படவுள்ளது.